
# ஆளுநர் ரவியை திரும்பப் பெறுக!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

குறுகிய கால நட்புறவுக்கு பிறகு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றன. பிரசார் பாரதி நிகழ்ச்சியில் மாநிலத்தின் தமிழ்த்தாய் வாழ்த்தை திரித்து ஒலிக்கச் செய்ததில் இந்த முறை மோதல் உருவானது. 1970 முதல் அதிகாரப்பூர்வ விழாக்களில் வணங்கி வரவேற்கும் பாடலாக இசைக்கப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து, டிசம்பர் 2021 முதல் மாநிலத்தில் அலுவலக ரீதியாக அறிவிக்கப்பட்டது


THE HINDU

Governor vs Govt.

Mr. Ravi must be withdrawn for needlessly wading into controversies

After a fleeting moment of camaraderie, political hostilities between Tamil Nadu Governor R.N. Ravi and Chief Minister M.K. Stalin are on the rise again, this time triggered by a distorted rendition of the State anthem at a Prasar Bharati event. The *Tamil Thai Vazhthu*, rendered as an invocation song at official functions since 1970, was declared the State anthem in December 2021. This followed a judge holding that there was no statutory or executive order requiring attendees to stand when the song is played, after a seer remained seated during its rendition. At the event that was attended by the Governor, a verse in this 55-second anthem hailing the ‘Dravidian land’ was conspicuously omitted. Though it was described as inadvertent, no attempt was made to rectify it on stage. Most political parties were disapproving of the omission. Mr. Stalin asked whether if Mr. Ravi was being a “Governor” or an “Aryan” and sought to know whether the Governor, “who suffers from Dravidian allergy”, would propose the deletion of the

### தேசிய கீதத்திலிருந்து நீக்குவாரா?

ஆளுநர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் 55 வினாடிகள் ஒலித்த இந்த கீதத்தில் “திராவிட நல் திருநாடும்” என்னும் சொல் தவிர்க்கப்பட்டது. இது கவனக் குறைவு என விவரிக்கப்பட்டாலும் மேடையில் அதை சரி செய்ய எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த தவறுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தன. “ரவி ஆளுநரா?அல்லது ஆரியரா? ஒருவேளை ஆரியராக இருந்தால் திராவிடம் குறித்த அலர்ஜியால் அவதிப்படும் அவர் தேசிய கீதத்திலிருந்து திராவிடம் என்ற வார்த்தையை நீக்கும் ஆலோசனையை முன்மொழிவாரா?” என்று முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

### தன் கருத்துடனேயே முரண்பாடு

ஆளுநர் இதைக் கண்டு கோபமடைந்து ஆரியர் என்ற குறிப்பை இனவெறி என விவரித்தார். ஆரியர்கள், திராவிடர்கள் என்ற கருத்து இனரீதியான பிளவு என்பதை காட்டிலும் புவியியல் அடிப்படையுடன் தொடர்புடையது. ஆங்கிலேயர்கள் தங்களின் தேவைக்கேற்ப அதை இனம் என மாற்றினர் என்று ஆளுநர் தன்னுடைய நம்பிக்கையை ஏற்கனவே வெளிப்படுத்தி இருந்தார். ஆனால் தன்னுடைய விளக்கத்திற்கு மாறாக அவரே ஆரியர் என்னும் குறிப்பை இனவெறி என்று விவரிக்கிறார். தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் முதலமைச்சரின் உயர் அரசியல் அமைப்பு பதவியின் கண்ணியத்தை குறைத்து விட்டதாகவும் வாதிட்டார்.

### ஆட்சி நிர்வாகம் சீர்குலைவு

ஆனால் திராவிடம் என்பது பிரிவினை வாத உணர்வை வளர்க்கும், ஒரே இந்தியா என்ற எண்ணத்தை ஏற்காத சூழலை உருவாக்கும், காலாவதியான ஒரு சித்தாந்தம் என தொடர்ந்து பேசி வந்துள்ளார். மாநிலத்தின் இரு மொழி கொள்கை மொழியியல் அடிப்படையில் நிற வெறிக்கு வழி வகுக்கிறது என்றும் கூறினார். கடந்த 50 ஆண்டுகளாக தமிழக மக்களின் மனதில் ஏராளமான நச்சுத்தன்மை புகுத்தப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டியிருந்தார். இத்தகைய கருத்துக்கள் அவர் திராவிடம் பற்றிய குறிப்புகளுக்கு எதிரானவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

### ஆர்.என்.ரவியை திரும்பப் பெற வேண்டும்

அரசின் செயல்பாட்டின் மீதான அவரது அதிக நாட்டம் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான அவரின் விரோதம் ஆகியவற்றை கருத்தில் கொண்டால் ரவியை இப்போது திரும்பப் பெற வேண்டும்.

-நன்றி

‘தி இந்து’ ஆங்கில நாளேடு

21.10.2024

---

முதல்வர் வழிகாட்டுதலில் — தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# பொதுமக்கள் ஊர்களுக்குச் செல்ல வசதியாக - 14,086 பேருந்துகள் இயக்கம்!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, அக். 23 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், 2024 - தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பொது மக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கு வசதியாக, 14,086 பேருந்துகள் இயக்கப்படுகிறது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 2024 ஆம் ஆண்டு வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டமானது, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், நேற்று முன்தினம் (21-10-2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறையை சார்ந்த அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத் துறை ஆணையர், காவல் துறை உயர் அலுவலர்கள், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வரும் 28-10-2024 முதல் 30-10-2024 வரையில், சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், 4,900 சிறப்புப் பேருந்துகள் என மூன்று நாட்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, 11,176 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட மூன்று நாட்களுக்கு 2,910 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 14,086 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

தீபாவளி பண்டிகை முடிந்த பின்னர், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு, வரும் 02/11/2024 முதல் 04/11/2024 வரையில், தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன் 3,165 சிறப்புப் பேருந்துகளும் மூன்று நாட்களும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 9,441 பேருந்துகள் ஏனைய பிற முக்கிய ஊர்களிலிருந்து பல் வேறு ஊர்களுக்கு 3,165 சிறப்பு பேருந்துகள் என மொத்தமாக 12,606 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

### வழித்தட மாற்றம் கார் மற்றும் இதர வாகனங்கள்!

கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதை தவிர்த்து (OMR) திருப் போரூர் செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிச் சுற்று சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### பயணிகளின் வசதிக்காக 24x7 கட்டுப்பாட்டு அறை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கு ஏதுவாக, 94450 14436 என்ற தொலைபேசி எண்ணை (24x7) மணி நேரமும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 (Toll Free Number) மற்றும் 044 24749002, 04426280445, 04426281611 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதுமட்டுமின்றி, பயணிகளின் நலன் கருதி, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை (Control Room) 24 மணி நேரமும் செயல்படும்.

மேலும், பேருந்து நிலையங்களுக்கு வருகை தரும் பயணிகள் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக பல்வேறு இடங்களில் தகவல் மையங்கள் (May I Help You) அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சிரமமின்றி பயணிக்க முன்பதிவு வசதியினை பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் பயணம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள்

பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய 2 பேருந்து நிலையங்களுக்கு செல்ல ஏதுவாக மாநகர் போக்கு வரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படும்.

இவ்வாறு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் குறிப்பிட்டார்.

---

அறநிலையத்துறை சார்பில் திருமணம் நடத்தி வைத்ததின் மூலம்

# ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மணமக்களின் வாழ்வில் முதலமைச்சர் ஒளியேற்றி வைத்துள்ளார்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, அக். 23 -

முதலமைச்சர் அவர்கள் (21.10.2024) அன்று சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், இணைகளுக்கு திருமணத்தை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (21.10.2024) அன்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் பொருளாதாரம் உயரும் வகையில் எண்ணற்ற



மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையில் சார்பில் திருக்கோயில்களில் ஏழை, எளிய குடும்பங்களை சார்ந்த மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தி, சீர்வரிசை பொருட்களை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அந்தவகையில், இந்த அரசு பொறுப்பேற்றபின், 2022-2023 ஆம் நிதியாண்டில் 500 இணைகளுக்கும், 2023 - 2024 ஆம் நிதியாண்டில் 600 இணைகளுக்கும் என மொத்தம் 1,100 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் “பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (21.10.2024) அன்று திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார்கள். சென்னை உட்பட மாநிலம் முழுவதும் இன்று மட்டும் மொத்தம் 379 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

மேலும், இணைகளுக்கு மாங்கல்யத்துடன் சீர்வரிசைப் பொருட்களாக கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் எரிவாயு அடுப்பு, வெட்கிரைண்டர், மிக்சி, குக்கர், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில், திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் 4 இணைகளுக்கும், கொன்னையூர் அருள்மிகு முத்துமாரி யம்மன் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும் என மொத்தம் 7 இணைகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மணமக்களின் வாழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒளியேற்றி வைத்துள்ளார்கள்.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத் துறை) தி.அனிதா, மாவட்ட அறங்காவலர் குழுக் தலைவர் தவ.பாஞ்சாலன், செயல் அலுவலர்கள் சந்திரசேகரன் (பெரம்பூர்), முத்துராமன் (புதுக்கோட்டை திருக்கோயில்கள்), முத்துகுமார் (திருபுனவாசல்), வட்டாட்சியர் பரணி, ஆய்வாளர்கள் யசோதா (குளத்தூர்), புவனேஸ்வரி (திருமயம்), வானதி (இலுப்பூர்), தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, மாமன்ற உறுப்பினர் (திருவப்பூர்) கனகம்மன்பாபு திருப்பணிக்குழு செல்வராஜ், க.மதியழகன் உள்ளாட்சி அமைப்புகளின்

பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! இந்திய அரசமைப்புச் சட்ட அடிப்படைக் கட்டமைப்பின் அங்கமாக ‘மதச் சார்பின்மை’ எப்போதும் திகழ்கிறது - என்று உச்சநீதி மன்றம் திங்களன்று அற்புதமாகத் தீர்ப்பு அளித்திருக்கிறதே?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; அதைத்தானே நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல முறை வலியுறுத்தி வருகிறார்! இந்தியா கூட்டணிக் கட்சியினர் தொடர்ந்து சுட்டிக்காட்டுகின்றனர்.**

**பல்வேறு மதங்கள், தேசிய இனங்கள் - மொழிகள் இருந்துவரும் இந்தியாவை ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி என்று பிரித்துப் பிளவு படுத்திடும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க.வையும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரையும், தேச பக்தி உள்ள அனைவருமே கண்டித்துக் கொண்டிருக்கின்றனர்.**

**எனினும் அவர்கள் தம்மைத் திருத்திக் கொள்ளவுமில்லை;**

**அந்தப் பின்னடைவு நோக்கத்தைக் கைவிடவும் இல்லை.**

**‘ திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்?’.**

---

திரும்பெரும்புதூரில் 180 கோடி ரூபாய் முதலீட்டில் இருசக்கர வாகன உற்பத்தி

# தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய யமஹா நிறுவனம் முடிவு!

## சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பம்!

சென்னை, அக்.23-

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி அமைந்தது முதலே தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது. பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்து தொழில் தொடங்கி வருகின்றன. மேலும், ஏற்கனவே உள்ள நிறுவனங்கள், பல கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்து வருகின்றன. இதனால் பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. அந்தவகையில், திரும்பெரும்புதூரில் ஆயிரத்து 789 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்பட்டு வரும் யமஹா நிறுவனம், தனது இருசக்கர வாகன உற்பத்தி தொழிற்சாலையை 180 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்கிறது. வல்லம் வடகாலில் உள்ள தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய சுற்றுச்சூழல் அனுமதிகோரி தமிழ்நாடு அரசிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை மூலம் ஏற்கனவே 5 ஆயிரத்து 203 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ள நிலையில், தற்போது கூடுதலாக மேலும் 431 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

---

# குஜராத்தில் 427 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல்!

## ரூ.250 கோடி மதிப்பிலானது என காவல்துறை தகவல்!

சண்டிகர், அக்.23-

பா.ஜ.க., ஆளும் குஜராத் மாநிலத்தில் போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரித்து காணப்படுகிறது. அதன் சாட்சியாக பல்வேறு இடங்களில் அவ்வப்போது போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. அந்தவகையில், பரூச் மாவட்டத்தில் உள்ள தொழில் வளர்ச்சி கழக வளாகத்தில் செயல்பட்டு வரும் தொழிற்சாலை ஒன்றிலிருந்து 427 கிலோ அளவுக்கு போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு 250 கோடி ரூபாயாகும். இதுதொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குஜராத்திலேயே பரூச் மாவட்டத்தில்தான் அதிகளவிலான போதைப் பொருட்கள் புழக்கத்தில் உள்ளன. இம்மாவட்டத்தில் இருந்து கடந்த 10 நாட்களுக்குள் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், போதைப் பொருட்கள் பறிமுதல் விவகாரம் குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள குஜராத் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

---

# கீழடி மற்றும் கங்கை கொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம்!

## தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது!

சிவகங்கை, அக்.23-

சிவகங்கை மாவட்டம் கீழடியில் புதிய திறந்தவெளி அருங்காட்சியகமும், சோழர்களின் வரலாற்றுச் சிறப்புகளை பறைசாற்றும் விதமாக அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகமும் அமைக்கப்பட உள்ளது. இதற்காக, தலா 15 கோடி ரூபாய் மதிப்பில் அருங்காட்சியகங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது. இதேபோல், 14 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை சேப்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு கலையரங்கத்தை புதுப்பிக்கும் பணிக்கும் பொதுப்பணித்துறை சார்பில் ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டுள்ளது.